

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார் சந்தித்து அண்ணல் அம்பேத்கர் விருது பெற்றமைக்காக வாழ்த்துப் பெற்றார். உடன் மாவட்டக் கழகப் பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , வி.சி.க. மாவட்டச் செயலாளர் பெரியார் உள்ளிட்ட பலர் இருந்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் ஒன்றியம்,வேங்கூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் திருக்கோவிலூர் ஆசனூர் சாலை இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் பணியினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (18.01.2025) சனிக்கிழமை அன்று தொடங்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

### மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது!

# தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை குறித்து புரிதல் இல்லாமல் எடப்பாடி பழனிச்சாமி பேசி வருகிறார்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**விருதுநகர், ஜன. 20-**

**தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை குறித்து அடிப்படை புரிதல் இல்லாமல் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசி வருவதாக, நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார். மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மாற்றந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்றும் தங்கம் தென்னரசு குற்றம் சாட்டியுள்ளார்.**

விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணற்றில் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாட்டின் நிதி நிலைமை கட்டுக்குள் உள்ளது, எதிர்க்கட்சி தலைவர் பழனிச்சாமி நிதி நிலை குறித்து மக்களிடையே தவறான தகவலை பரப்புகிறார். ஒன்றிய அரசின் நிதிக்குழு பரிந்துரை அடிப்படையின் வரம்புக்குட்பட்டுதான் தமிழ்நாடு அரசு கடன் வாங்குகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மின்துறையில் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்ய, மின்சாரத்துறைக்கு தி.மு.க. அரசு 50 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

சென்னை மெட்ரோ பணிகளுக்கு 26 ஆயிரம் கோடி சொந்த நிதியை தமிழ்நாடு அரசு பயன்படுத்தி வருகிறது. மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மாற்றந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வருகிறது.

**தமிழ்நாட்டின் நிதிநிலை கட்டுக்குள்தான் உள்ளது!**

உள்நாட்டு உற்பத்தி அளவை பொறுத்தே, கடன் வாங்கும் அளவு, திருப்பி செலுத்தும் திறன் முடிவு செய்யப்படுகிறது. நிதிக்குழு பரிந்துரைத்துள்ள வரம்பை விட குறைவாகவே தமிழ்நாடு அரசு கடன் வாங்கியுள்ளது . 2021-22 நிதியாண்டில் 28.7% அளவுக்கு கடன் வாங்கலாம் என நிதிக்குழு பரிந்துரை செய்த நிலையில், 27.01% அளவுக்கே கடன் வாங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிதிநிலைமை கட்டுக்குள்தான் உள்ளது.

தமிழ்நாட்டின் நிதி மேலாண்மையில் நுட்பமாக செயல்பட்டு வருகிறோம். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்திற்கும் மாநில அரசு தான் அதிக நிதியை கொடுக்கிறது. அதேபோல் அ.தி.மு.க. ஆட்சியில்



ஏற்பட்ட நிதி சுமையையும் நாங்கள் தான் சரி செய்து வருகிறோம். அதனால் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டின் கடன்கள் குறித்த குற்றச்சாட்டுகளை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை!**

ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு அளிக்க வேண்டிய பங்கீடுகளை சரியான நேரத்தில் அளிக்க வேண்டும். ஆனால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் மற்றும் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்குதான் அதிக நிதி அளிக்கப்படுகிறது. உ.பி.க்கு மட்டும் ரூ.31,039 கோடியும், பீகார் ரூ.17,403 கோடியும் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் தென் மாநிலங்களுக்கு 15 சதவிகிதம்தான் நிதி பகிர்வில் கிடைத்துள்ளது.

5 மாநிலங்களுக்கும் சேர்த்து ரூ.27,336 கோடி தான் அளிக்கப்பட்டுள்ளது. அதிலும் தமிழ்நாட்டுக்கு மட்டும் ரூ.7,056 கோடிதான் அளிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு எப்போதும் மாற்றந்தாய் மனப்பான்மையில்தான் பார்க்கிறது. இப்படியிருந்தும் தமிழ்நாடு நிதி நிலைமையை சிறப்பாக கையாண்டு வருகிறோம்.

**பரந்தூர் விமான நிலையம்!**

விமான நிலையங்களை உருவாக்குவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையானது. இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களில் ஒப்பிடும் போது, சென்னை விமான நிலையம் சிறியது தான். இருந்தாலும் சென்னை விமான நிலையத்தில் ஆண்டுக்கு 2 கோடி பேர் பயணம் மேற்கொள்கின்றனர். அடுத்த 7 ஆண்டுகளில் இது இன்னும் உயரும். இதனால் சென்னை விமான நிலையத்தை விரிவுப்படுத்தினாலும், சமாளிக்க முடியாது. இதனால் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி இரண்டுக்கும் இடையில் உள்ள தொடர்பை உணர்ந்திருப்பதால்தான், பரந்தூர் விமான நிலையம் அவசியம். இது தொழிற்புரட்சிக்கும் அடித்தளமாக அமையும்.

தொழில், வர்த்தக கட்டமைப்பு வளர்ச்சியை பரந்தூர் விமான நிலையம் உறுதி செய்யும். பரந்தூருக்கு எந்த அரசியல் கட்சி தலைவர்களும் செல்லலாம். விஜய் மக்களைச் சந்திக்கும் போது அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், நிச்சயமாக அந்தக் குறைகளை அரசு பரிசீலிக்கும். விஜய் செல்வதற்கும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

பரந்தூர் விமான நிலையம் எல்லாவற்றுக்கும் தேவையாக உள்ளது. அதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வளர்ச்சி ஒருபுறம் இருந்தாலும், மக்கள் பாதிக்கக் கூடாது. அதனால் கிராமங்களில் பாதிப்படையக் கூடிய மக்களுக்கு, சந்தை மதிப்பை விடவும் கூடுதல் இழப்பீடு அளிப்பதும், அவர்களின் மறுகுடியமர்விலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

---

# இட ஒதுக்கீட்டு வரம்பை 50 சதவிகிதத்திற்கு மேல் உயர்த்திட காங்கிரஸ் போராடும்!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உறுதி!

**பாட்னா , ஜன. 20 -**

**இடஒதுக்கீட்டு வரம்பை தற்போதைய 50 சதவீதத்திற்கு மேல் உயர்த்த காங்கிரஸ் போராடும் என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.**

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பீகார் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. ஆகியவை அரசியலமைப்பிற்கு எதிரானவை எனக் கூறினார். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், சாதி வாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தும் என்றும் அதன் அடிப்படையில், மக்களின் பிரதிநிதித்துவத்தை நிர்ணயித்த பிறகு 50 சதவீத இடஒதுக்கீடு உச்ச வரம்பு நீக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு சாதியும் அதன் பங்கைப் பெற வேண்டும் என்றும், அனைவரும் சமம் என்று கூறும் அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம் இதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் சாசனத்துக்கும், மனு தர்மத்துக்கும் இடையேயான போரை தேசம் பார்த்து வருவதாகக் கூறிய அவர், நாடு 1947ல் சுதந்திரம் அடைந்ததை ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் நம்பவில்லை என்றும் அரசியல் சாசனம் மீதும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை என்றும் ராகுல் காந்தி விமர்சித்தார். வன்முறை மற்றும் வெறுப்பை பரப்பும் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கூட்டணிக்கு எதிரான போராட்டம் சித்தாந்த ரீதியானது என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.



நாட்டின் மொத்த மக்கள் தொகையில் தலித், சிறுபான்மையினர் மற்றும் சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரே 90 சதவீதம் உள்ள னர். ஆனால் அரசு துறைகள் மற்றும் பிற உயர்பதவிகளில் அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதில்லை. அவர்களுக்கு சம உரிமையை பெற்றுத் தரவே ஜாதி வாரி கணக்கெடுப்பை நடத்த காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

பிகாரில் முதல்வர் நிதீஷ் குமார் தலைமையிலான அரசு நடத்திய சாதிவாரி கணக்கெடுப்பு மக்களை முட்டாளாக்கும் செயல். அதைப் போல் அல்லாமல் மக்களின் வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் தேசிய அளவிலான சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவேண்டும்.

தேர்தலில் 400 தொகுதிகளுக்கு மேல் வெல்வோம் என ஒவ்வொரு பிரசாரத்திலும் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் தெரிவித்து வந்தனர்.

ஆனால் நமது கூட்டு முயற்சியால் பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்கச் செய்யாமல் தடுத்துவிட்டோம். இதனால் அரசமைப்புச் சட்டத்தை தூக்கி எறிய முயன்ற பிரதமர் மோடி தனது முயற்சியில் தோல்வியடைந்தார். மாறாக அரசமைப்புச் சட்டத்துக்கு தலை வணங்கினார்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டிய பிறகே நாட்டுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாக ஆர், எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் கூறுவது அரசமைப்புச் சட்டத் துக்கு எதிரான கருத்து. அரசமைப்புச்சட்டத்தை பாதுகாக்கும் காங்கிரஸுக்கும் அதற்கு எதிராக வெறுப்பு ணர்வை பரப்பும் பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு இடையே அரசியல் ரீதியாக மோதல் நடை பெற்று வருகிறது.

இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

---

# நேசம் அறக்கட்டளை சார்பில் திருக்குறள் போட்டி!

சென்னை, ஜன. 20–

நேசம் மனித வள மேம்பாட்டு மையம் சார்பில் திருவள்ளுவர் தின விழாவை யொட்டி திருக்குறள் ஒப்பித்தல் போட்டி, திருக்குறள் வினாடி வினா, குறளோவியம் ஓவியப் போட்டி, திருக்குறள் பேச்சுப் போட்டி மற்றும் பறை இசை நிகழ்ச்சியுடன் பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், சிலம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றது. முன்னதாக சமத்துவப் பொங்கல் வைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப் பட்டது. மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பி.டி.பாண்டிசெல்வம் தலைமையில் அரிமா என் சிவக்குமார், சேவா பாலம் இருளப்பன், எம்.மதியழகன், எம்.ஆர்.சதீஷ், லயன் தியாகராஜன், ஆர்.ரமேஷ், சிலம்பம் சண்முகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வி.ஜி.பி. உலக தமிழ் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோஷம் பங்கேற்று கேரம் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தங்க மங்கை காசிமா, கராத்தே நிவேதா, குத்துச் சண்டை ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு சிறப்பு விருதுகள் வழங்கினார். இதில் பல்வேறு போட்டிகள் மட்டும் கலை நிகழ்ச்சியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பாரதி, கிருஷ்ணகுமார், ‘சிகரங்களை நோக்கி வள்ளுவம்’ எனும் தலைப்பில் உரையாற்றினார். விழாவில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் தா.இளைய அருணா. வி.கவிகணேசன், தேவி கதிரேசன், பாராட்டுரை வழங்கினர். முன்னதாக நாட்டியச்சேத்திரா குழுவினரின் திருக்குறள் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் ஆயிரக்கணக்கானோர் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



கரூர் மாவட்டம் ராச்சாண்டார் திருமலையில் ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் வி .செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கார் மற்றும் இரு சக்கர வாகனம் ஆகியவற்றை பரிசாக வழங்கினார். உடன் கலெக்டர் மீ.தங்கவேல், குளித்தலை எம்எல்ஏ இரா.மாணிக்கம், எஸ்.பி,ஃபெரோஸ் கான் அப்துல்லா, உள்ளிட்டோர் அருகில் உள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியம், நாகர்கூடல் ஊராட்சியில் பல்வேறு மாற்றுக் கட்சியில் இருந்து கழகத்தில் தங்களை இணைத்து கொண்ட 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணியிடம் வைத்த கோரிக்கையையொட்டி தர்மபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் டி.பி.எஸ்.இளையசங்கர், நல்லம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வைகுந்தம் முன்னிலையில் புதிதாக கட்சியில் இணைந்த மற்றும் கிராம இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என். பி.பெரியண்ணன்,தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.